S-1

# தமிழ் இணையக் கல்விக்கழகம்
# சென்னை – 600 025.

## இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)
## மூன்றாம் ஆண்டு – ஆறாம் பருவம்

## ஜனவரி – பிப்ரவரி 2026
## D041 மொழி வரலாறு –2

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

### பிரிவு – 1

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. எந்த நூற்றாண்டில் கல்வெட்டு எழுத்துப் பயன்படத் தொடங்கியது?
2. சகர மாற்றத்திற்கான சான்று ஒன்று தருக?
3. ஓவிய எழுத்து முறை எம்மொழிகளில் காணப்படுகின்றன?
4. தமிழ்நாட்டில் 7, 8 ஆம் நூற்றாண்டில் இருந்த எழுத்து வகைகள் யாவை?
5. சீவக சிந்தாமணியில் மட்டும் வழங்கும் முன்னிலைப் பன்மைப்பெயர் யாது?
6. ஐந்தாம் வேற்றுமை உருபு முதன்முதலில் எப்பொருளை உணர்த்தலாயிற்று?
7. வினைச்சொல்லின் உள்ளமைப்பு எந்த வரிசையில் அமைந்துள்ளது?
8. சங்க காலத்தில் நல்ல என்ற சொல்வடிவம் எத்தனை நிலைகளில் வழங்கியது?
9. சமூகக் கிளைமொழியின் இரு வழக்குகளைக் குறிப்பிடுக.
10. 'எழில்' என்ற சொல் உணர்த்தும் எவையேனும் இரு பொருட்களைக் கூறுக.
11. தமிழில் வழங்கும் எதிரொலிச் சொற்களுக்குச் சான்றுகள் தருக.
12. 'கழகம்' என்ற சொல் அடைந்த உயர் பொருட்பேறு யாது?
13. இதழ் குவி முயற்சியால் பிறக்கும் உயிர் ஒலிகளைக் குறிப்பிடுக.
14. மொழியியலார் குறிப்பிடும் அரை உயிர்கள் யாவை?
15. கொடுந்தமிழ் நாடுகள் எத்தனை?

## பிரிவு – 2

**எவையேனும் <u>ஐந்து</u> வினாக்களுக்கு <u>ஒரு பத்தி அளவில்</u> விடை தருக. (5x3=15)**

16. எவ்வாறான காரணங்களால் ஒரு மொழியில் மாற்றம் ஏற்படுகிறது?
17. எத்தனை வகையான சொல்லெழுத்துகள் உள்ளன? அவையாவை?
18. உயர்வு ஒருமைப் பதிலிடு பெயர் என்றால் என்ன? சான்று தருக.
19. இடைக்காலத்தில் இருந்த நிகழ்கால இடைநிலைக்கான சான்றுகளைக் காட்டுக.
20. உணர்ச்சி மிகுதியால் சொல் தொடர் அமையும் முறை யாது?
21. சொற்பொருள் மாற்றத்திற்கான காரணங்களில் இரண்டினைக் குறிப்பிடுக.
22. உடம்படுமெய் ஒலி என்றால் என்ன?
23. பொதுக்கிளைமொழி என்றால் என்ன?

## பிரிவு – 3

**<u>மூன்று பக்கக் கட்டுரை வடிவில்</u> விடை தருக. (3x15=45)**

24. (அ) எழுத்து வருகை வரலாற்றை ஆராய்க.

(அல்லது)

(ஆ) சொல்லியல் மாற்றங்களை விளக்கி கட்டுரை வரைக.

25. (அ) சுட்டுப்பெயர்கள் குறித்து கட்டுரை தருக.

(அல்லது)

(ஆ) சொற்பொருளின் வகைப்பாடு குறித்து கட்டுரை தருக.

26. (அ) தொல்காப்பியக் காலம் முதல் தற்காலம் வரை ஏற்பட்ட சொற்பொருள் மாற்றங்கள் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) உயிரொலிகள் தோன்றி வளர்ந்த வரலாற்றைத் தொகுத்து எழுதுக.

***